பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
25 10 2025 **SATURDAY** 7 15 **AM**
ஆகாஷவாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பீகார் சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்தில் போலியான தகவல்களை அகற்ற அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

2. தேசிய ஓய்வூதிய திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்தில் ஊழியர்களுக்கான முதலீட்டு வாய்ப்புகளை நீட்டிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

3. ஜம்மு கஷ்மீரிலிருந்து மாநிலங்களவைக்கு நடைபெற்ற தேர்தலில் ஆளும் தேசிய மாநாட்டுக் கட்சி 3 இடங்களையும், பிஜேபி ஒரு இடத்தையும் கைப்பற்றியுள்ளன.

4. இந்தியா – சீனா இடையே நேரடி விமான போக்குவரத்து சேவை மீண்டும் தொடங்கவிருப்பது, இருநாடுகளுக்கு இடையேயான நட்புறவை மேம்படுத்தும் என்று சீனா கூறியுள்ளது

5. இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி, இன்று நடைபெறவுள்ளது.

**>>>>>><<<<<<**

பீகார் சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்தில் போலியான தகவல்களை அகற்ற அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது

செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் இதுபோன்ற உள்ளடக்கங்கள் தயாரிக்கப்படுவதாக ஆணையத்திற்கு புகார்கள் வந்தன.

இதுபோன்ற உள்ளடக்கங்கள் வாக்காளர்களை அச்சுறுத்தும் சூழலை ஏற்படுத்துவதாக ஆணையம் கூறியுள்ளது.

தேர்தலில் போட்டியாளர்கள் குறித்து தவறான தகவல்களை பரப்ப சில கட்சிகள் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவதாகவும் ஆணையத்திற்கு புகார்கள் வந்தன.

இதுதொடர்பாக, முந்தைய வழிகாட்டுதல்களையும் ஆணையம் அரசியல் கட்சிகளுக்கு நினைவுபடுத்தியுள்ளது.

*இந்நிலையில், தேர்தல்களின் போது, வாக்குச்சாவடிகளில் குறைந்தபட்ச வசதிகள் இருப்பதை அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச தலைமை தேர்தல் அதிகாரிகள் உறுதி செய்யவேண்டும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.*

*குடிநீர், காத்திருக்கும் அறை, கழிப்பிடங்கள், வாக்குச்சாவடிகளில் போதிய மின்விளக்கு வசதி உள்ளிட்டவை இருக்க வேண்டும் என்று அது தெரிவித்துள்ளது.*

**>>>>>><<<<<<**

*பீகார் மாநிலத்தில் மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியமைத்தால், அடுத்த ஐந்தாண்டுகளில் ஒரு கோடி பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று ஐக்கிய ஜனதா தள தலைவர் திரு. நிதிஷ்குமார் தெரிவித்துள்ளார்.*

*பாட்னாவில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய அவர். கடந்த ஐந்தாண்டுகளில் 40 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தி தரப்பட்டதாக கூறினார்.*

*கடந்த ஐந்தாண்டுகளில் ஐக்கிய ஜனதா தளம் - பிஜேபி கூட்டணி ஆட்சியில், பீகார் மாநிலம் பல்வேறு துறைகளில் வளர்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*தலைநகர் பாட்னா, கடந்த காலங்களில் எப்படி இருந்தது என்றும், கடந்த ஐந்தாண்டுகளில் எப்படி மாற்றப்பட்டுள்ளது என்பதையும் இளம் தலைமுறையினருக்கு மூத்த குடிமக்கள் விளக்க வேண்டும் என்றும் திரு. நிதிஷ்குமார் கேட்டுக் கொண்டார்.*

**>>>>>><<<<<<**

*தேசிய ஓய்வூதிய திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்தில் ஊழியர்களுக்கான முதலீட்டு வாய்ப்புகளை நீட்டிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.*

*தனியார் துறை ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டது போன்று முதலீட்டு விருப்பங்கள் தங்களுக்கு அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு ஊழியர்கள் விடுத்த கோரிக்கையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.*

*ஊழியர்கள் தங்களது ஓய்வூதிய நிதியை தனிப்பட்ட விருப்பங்களுக்கு ஏற்ப நிர்வகிக்கவும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

**>>>>>><<<<<<**

*ஜம்மு கஷ்மீரிலிருந்து மாநிலங்களவைக்கு நடைபெற்ற தேர்தலில் ஆளும் தேசிய மாநாட்டுக் கட்சி 3 இடங்களையும், பிஜேபி ஒரு இடத்தையும் கைப்பற்றியுள்ளன.*

*மொத்தம் உள்ள 4 இடங்களுக்கு நேற்று நடைபெற்ற தேர்தலில், தேசிய மாநாட்டு கட்சியின் மூத்த தலைவர் திரு. சௌத்ரி முஹமது ரம்ஜான், திரு. Sajad Kichloo, திரு. Shammi Oberoy ஆகியோர் வெற்றிபெற்றனர்.*

*பிஜேபி சார்பில் திரு. சத்பால் சர்மா வெற்றி பெற்றார்.*

*ஜம்மு கஷ்மீரிலிருந்து மாநிலங்களவைக்கு காலியாக இருந்த 4 இடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில், ஆளும் தேசிய மாநாட்டுக் கட்சி 4 வேட்பாளர்களை நிறுத்தியிருந்தது.*

*ஆனால், 4வது வேட்பாளரான திரு. Imran Nabi Dar, 10 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.*

**>>>>>><<<<<<**

*இந்திய கடலோர காவல்படையில் நவீன வசதிகளுடன் கூடிய இரண்டு அதிவிரைவு படகுகள் சேர்க்கப்பட்டுள்ளன.*

*கோவாவில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட இந்த படகுகள், 52 மீட்டர் நீளமுள்ளது.*

*உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டுள்ள இந்தப் படகுகள், விரைவான ரோந்துப் பணிகளுக்கு பயன்படத்தப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*320 டன் எடையுள்ள இந்த படகுகள், மீன்வளப் பாதுகாப்பு, கடலோர ரோந்துப் பணி, கடத்தல் தடுப்பு, கடற்கொள்ளை தடுப்பு உள்ளிட்ட பணிகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளன.*

**>>>>>><<<<<<**

*இந்தியா – சீனா இடையே நேரடி விமான போக்குவரத்து சேவை மீண்டும் தொடங்கவிருப்பது, இருநாடுகளுக்கு இடையேயான நட்புறவை மேம்படுத்துவதற்கான நேர்மறையான நடவடிக்கை என்று சீனா கூறியுள்ளது.*

*இந்தியாவுடனான தனது உறவுகளை நீண்டகால வளர்ச்சிக்கு பயன்படுத்த சீனா விருப்பத்துடன் உள்ளதாக அந்நாட்டு வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.*

*இருநாடுகளுக்கு இடையேயான விமான சேவை நாளை தொடங்கவுள்ளதை அடுத்து சீனா இவ்வாறு கூறியுள்ளது.*

இந்தியாவின் இந்த நடவடிக்கை, இருநாட்டு மக்களிடையே நட்புறவை வலுப்படுத்தும் என்றும் சீனா தெரிவித்துள்ளது.

சீனாவின் Guangzhou-விற்கு நாளை முதல் கொல்கத்தாவிலிருந்தும், அடுத்த மாதம் 10ஆம் தேதி முதல் தில்லியிலிருந்தும் விமான சேவை தொடங்கப்படவுள்ளன.

>>>>>><<<<<<

ஏமனில் செயல்படும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடந்த இரண்டு நாட்களில் ஐ.நா சபையின் இரண்டு ஊழியர்களை கைது செய்துள்ளனர்.

மேலும், அவர்கள் தங்கியிருந்த இடங்களில் சோதனை நடத்தியதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

உள்நாட்டு போரினால் பாதிக்கப்பட்ட ஏமனில் ஐ.நா. அமைதி காக்கும் படை செயல்பட்டு வருகிறது.

இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் இடம்பெற்றுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள இரண்டு ஊழியர்கள் ஐ.நாவின் உலக உணவுத் திட்ட பணியாளர்கள் என்று ஐ.நா சபையின் செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

ஹவுதி கிளர்ச்சியாளர்களின் இதுபோன்ற நடவடிக்கைகள், ஏமன் மக்களுக்கு உதவி செய்வதை மேலும் கடினமாக்கும் என்று அவர் கூறினார்.

ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஐ.நா ஊழியர்கள் பணிபுரிவதை மறுபரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயம் இதனால் ஏற்படுகிறது என்றும் ஐ.நா சபையின் செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

நான்கு நாள் Chhat பூஜை நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்று தொடங்குகிறது.

சூரியக் கடவுளை வணங்கும் இந்த விழாவிற்காக தலைநகர் தில்லியிலிருந்து உத்தரபிரதேசம், பீகார் மாநிலங்களுக்கு ஏராளமானோர் செல்வதால், சிறப்பு ரயில்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சென்னையிலிருந்து பீகார் மாநிலம், Barauni-க்கு சிறப்பு ரயில் இன்று இயக்கப்படவுள்ளது.

சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து இன்று காலை மணி 9.15க்கு இந்த ரயில் புறப்படும்.

*மறுமார்க்கத்தில் இம்மாதம் 29ஆம் தேதி Barauni-யிலிருந்து சென்னை கடற்கரை ரயில் நிலையத்திற்கு சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.*

**>>>>>><<<<<<**

*சுயசார்பு என்பது வெறும் பொருளாதார கொள்கை அல்ல என்றும், அது நாட்டின் சுயமரியாதையோடு சம்பந்தப்பட்டது என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.*

*ராஜஸ்தான் மாநிலம், கோட்டாவில் நேற்று நடைபெற்ற சுயசார்பு இந்தியா மாநாட்டில் பேசிய அவர். பொதுமக்கள் அனைவரும் அன்றாட வாழ்வில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்களையே பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.*

*உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை பயன்படுத்துவதன் மூலம், விவசாயிகள், தொழிலாளர்கள், கைவினைக் கலைஞர்கள் மற்றும் வர்த்தகர்களின் வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.*

*வலுவான சாலை, ரயில் மற்றும் விமான போக்குவரத்து வசதிகள் காரணமாக, நாட்டின் பல்வேறு பகுதிகள் வேகமாக முன்னேறி வருவதாகவும் திரு. ஓம் பிர்லா தெரிவித்தார்.*

**>>>>>><<<<<<**

*மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான், இன்று வேலூரில் விவசாயிகளுடன் கலந்துரையாடுகிறார்.*

*வளர்ச்சியடைந்த வேளாண் உறுதி திட்டத்தின் ஒரு பகுதியாக, வேளாண் அறிவியல் நிலையத்தில் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*வேளாண்மையை கூடுதல் உற்பத்தி சார்ந்ததாகவும், விவசாயிகளை மையப்படுத்தியதாகவும் மாற்றுவதற்கு தேசிய மற்றும் மாநில அளவிலான முயற்சிகளை ஒன்றுபடுத்தும் வகையிலும் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*வேளாண் துறையில் நாடு அடைந்துள்ள முன்னேற்றத்தை கொண்டாடும் வகையில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.*

*இந்த நிகழ்ச்சியின்போது, சாகுபடியில் புதிய தொழில்நுட்பங்களை புகுத்திய விவசாயிகள், மகளிர் சுயஉதவி குழுக்கள், கிராமப்புற இளைஞர்கள் ஆகியோருடன் அமைச்சர் கலந்துரையாடவுள்ளார்.*

வேளாண் உற்பத்தி குறைவாக உள்ள மாவட்டங்களில் அதன் உற்பத்தியையும், விவசாயிகளின் நலனையும் மேம்படுத்தும் வகையில் செயல்படுத்தப்படும் பிரதமரின் திட்டம் மற்றும் இயற்கை வேளாண்மை முன்முயற்சிகள் குறித்தும் அமைச்சர் விவசாயிகளுடன் கலந்துரையாடவுள்ளார்.

>>>>>><<<<<<

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பு நிலைமை மேம்படும் வரை அந்நாட்டுடனான வர்த்தகம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தானுடனான சமீபத்திய எல்லை மோதல் காரணமாக, ஆப்கானிஸ்தானில் குனார் ஆற்றின் மீது அணைகள் கட்டும் பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

தற்போது அந்தப் பணிகள் தொடரும் என்று ஆப்கானிஸ்தான் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் பாயும் குனார் ஆற்றின் குறுக்கே இந்த அணை கட்டப்படுகிறது.

இதனால் பாகிஸ்தானுக்குள் வரும் தண்ணீர் குறையும் என்று அந்நாடு இந்த திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

>>>>>><<<<<<

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி, இன்று நடைபெறவுள்ளது.

இப்போட்டி சிட்னியில் காலை 9 மணிக்கு தொடங்குகிறது.

ஏற்கனவே நடைபெற்ற இரண்டு போட்டிகளிலும் ஆஸ்திரேலியா வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியது.

>>>>>><<<<<<

புரோ கபடி லீக் போட்டியின், ப்ளே ஆப் சுற்று ஆட்டத்தில் இன்று ஹரியானா - ஜெய்ப்பூர், மும்பை – பாட்னா அணியையும் எதிர்கொள்கின்றன.

>>>>>>END<<<<<<